வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 20.01.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 20 பக்கங்கள் : 08




## மருத்துவ சேவைகள் ஸ்தம்பிக்கும் அபாயம்

**அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் 23ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பு**

கொழும்பு, ஜன. 20

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் ஜனவரி 23 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் சமில் விஜேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

07

## திருமலை புத்தர் சிலை விவகாரம் தேரர்களின் விளக்கமறியல் நீடிப்பு

திருமலை, ஜன. 20

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் அனுமதி இன்றி புத்தர் சிலை ஒன்றை நிறுவ முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தேரர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

07

# வடக்கில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் ஆர்வம்!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 20

முதலீட்டாளர்கள் வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வமாக உள்ள நிலையில், அதற்கான அடிப்படை உட்கட்டுமானங்களை மேம்படுத்தி, முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்கவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் கீழான தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு - செலவுத் திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழான உலக வங்கியின் திட்டங்களுக்கான பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல், ஆளுநர்

07



# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அடக்குமுறையை மீள உருவாக்குகிறது!

**மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஜன. 20

இலங்கையில் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அல்லது உத்தேச "அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டம்" குறித்து, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தமது விமர்சனத்தை வெளியிட்டுள்ளது

2025 டிசெம்பரில் நீதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இந்த யோசனை தற்போதைய சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றாகக் கொண்டு வரப்படவுள்ளது.

ஆனால், இந்தப் புதிய சட்டத்திலும் பழைய சட்டத்தைப் போன்றே

07

## அரசமைப்பு பேரவைக்கு 3 பேரை நியமிப்பதில் கடும் இழுபறிநிலை!

கொழும்பு, ஜன. 20

அரசியலமைப்பு பேரவைக்கு மூன்று சிவில் சமூக உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக, அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று உறுப்பினர்களின் பெயர்களை தெரிவு செய்வதில், பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையில் உடன்பாடு ஏற்படவில்லை.

சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும்

07

## போர்க்கால பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டோருக்கு இன்னும் தீர்வில்லை

**உண்மை மற்றும் நீதிக்கான திட்ட அமைப்பு**

கொழும்பு, ஜன. 20

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்தும், போர்க் கால பாலியல் வன்முறையை அனுபவித்து ஏதிலிகளாக வாழும் இலங்கையர்கள் தொடர்ந்தும் போராடி வருவதாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசின் அங்கீகாரம், நீதி, இழப்பீடு எதுவும் இல்லாத நிலையில், இந்த வன்முறைகளின் விளைவுகள் குடும்பங்களிலும் சமூகங்களிலும் நீடிப்பதாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

தற்போதைய

07

## தமிழரசு குறித்து அநுர தரப்பு குத்தி முறியத் தேவையில்லை!



**சீ.வீ.கே. சிவஞானம் சுட்டிக்காட்டு**

யாழ்ப்பாணம், ஜன. 20

"தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான சிறீதரன், சுமந்திரன் தொடர்பில் - கட்சியின் உள்வீட்டு விவகாரங்களில் தேசிய மக்கள் சக்தி தலையிடவேண்டிய அவசியம் இல்லை. அதேபோன்று இந்த விவகாரத்தில் அநுர தரப்பு குத்தி முறியவும் தேவையில்லை. மக்கள் மத்தியில் தமிழரசை மலினப்படுத்தும் அவர்களின் கனவும் ஒருபோதும் பலிக்காது."

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம்.

கல்வியங்காட்டிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று

07

## யாழில் எலிக்காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

அல்வாய் மேற்கு, அல்வாய் பகுதியை சேர்ந்த அன்னலிங்கம் அஜந்தன் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு கடந்த 17ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் நேற்று அதிகாலை இரத்த வாந்தி எடுத்துள்ளார். பின்னர் காலை

07

## முன்பள்ளி கல்வியில் பெரும் மாற்றம் 2027 முதல் பொதுவான பாடத்திட்டம்!

கொழும்பு, ஜன. 20

2027ஆம் ஆண்டளவில் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்கும் பொதுவான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 19,000 ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜினி சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினின் மட்ரிட் நகரில் நடைபெற்ற சர்வதேச பராமரிப்பாளர் மாநாட்டின், எதிர்கால

07

## வவுனியாவில் குளத்தில் மூழ்கி உயர்தர மாணவன் உயிரிழப்பு!

வவுனியா, ஜன. 20

வவுனியா, மயிலங்குளம் குளத்தில் நீராடச் சென்ற மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக மாமடு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 4 மாணவர்கள் மயிலங்குளம் குளத்திற்கு நேற்று முன்தினம் மாலை குளிக்கச் சென்றுள்ளனர். இதன்போது குறித்த மாணவர்கள் குளத்தில் குளித்துக்கொண்டிருந்த போது ஒரு மாணவன் நீரில் முழ்கி மரணமடைந்துள்ளார்.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மாவட்ட செயலகத்தின் சூரியப் பொங்கல் விழா நேற்று!



மன்னார், ஜன. 20

மன்னார் மாவட்ட செயலக அலுவலர்கள் ஏற்பாடு செய்த தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான சூரியப் பொங்கல் விழா மற்றும் உழவர் கௌரவிப்பு என்பன நேற்று காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் . க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது அரசாங்க அதிபர் மற்றும் அலுவலர்கள் இணைந்து பொங்கல் பொங்கினர்.

அதனை தொடர்ந்து நடன நிகழ்வுகள் அரங்கேறின. தொடர்ந்து உழவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பை மதிக்கும் வகையில் உழவர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து ஒருவர் வீதம் 5 உழவர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய மட்டத்தில் சிறப்பான சாதனைகளைப் படைத்த மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பரிசளிப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

## இந்தியப் பல்கலைக்கழகங்களில் குறைந்த செலவில் உயர்தர கல்வி!

### வடக்கு மாகாண ஆளுநர் பாராட்டு



யாழ்ப்பாணம், ஜன. 20

“இந்தியப் பல்கலைக்கழகங்கள் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை, பெரும்பாலான மேற்குலக நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் செலவில் நான்கில் ஒரு பங்கு செலவிலேயே வழங்குகின்றன. இது உயர்தரக் கல்வியை எமது சமூகம் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக மாற்றுகின்றது.”

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் அனுசரணையில், சிகரம் அக்கடமி மற்றும் சேப் நிறுவனம் இணைந்து நடாத்திய "இந்தியாவில் கல்வி" கல்வி வழிகாட்டல் கண்காட்சி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் கண்காட்சியைப் பார்வையிட்ட பின்னர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது-

இந்த நிகழ்வானது ஒரு சாதாரணக் கண்காட்சி மட்டுமல்ல. இது எமது இளைஞர்கள் உலகத்தரம் வாய்ந்த கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு நுழைவாயில். அத்தோடு, இது வலுவடைந்து வரும் "இந்தியா - இலங்கை அறிவுசார் பங்காண்மையின்" ஒரு சான்றாகவும் திகழ்கின்றது.

இந்தியா இன்று உலகின் இரண்டாவது மிகப்பெரிய கல்வி மையமாகத் திகழ்கின்றது. அங்கு ஏறத்தாழ 1,300 பல்கலைக்கழகங்களும் 75,000 கல்லூரிகளும் உள்ளன. இங்குள்ள யாழ்ப்பாண மாணவர்களுக்கு, முதன்மையான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பை இந்தக் கண்காட்சி வழங்குகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் 2,500 ஆண்டுகளுக்கும் மேலான கலாசார மற்றும் வரலாற்றுத் தொடர்புகள் உள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் ஒரு மாணவருக்கு, இந்தியாவில் கல்வி கற்பது அதிகபட்ச கலாசார இணக்கப்பாட்டையும், ஒரு இணக்கமான சூழலையும் வழங்குகின்றது.

எமது பிராந்தியம் ஏற்கனவே வலுவான பழைய மாணவர் தடம் ஒன்றைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி ஆகியவற்றின் பல விரிவுரையாளர்கள், இந்தியாவில் தமது பயிற்சியைப் பெற்ற பெருமைமிக்க ஐ.சி.சி.ஆர். புலமைப்பரிசில் பெற்றவர்கள்.

இந்திய அரசாங்கம் இலங்கை மாணவர்களுக்காக ஆண்டுதோறும் ஏறத்தாழ 800 புலமைப்பரிசில்களை வழங்குகின்றது. இவை இளங்கலை, முதுகலை மற்றும் செவ்வியல் இசை, நடனம் போன்ற விசேட துறைசார் பயிற்சிகளையும் உள்ளடக்கியுள்ளன.-என்றார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, இந்தியத் தூதரக அதிகாரிகள், இந்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் பங்கேற்றனர். (அ)

## மலரும் மூளாய் அபிவிருத்தி மையத்தின் பொங்கல் விழா!



யாழ்ப்பாணம், ஜன. 20

மலரும் மூளாய் அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா நேற்று முன்தினம் மூளாய் - பிரசாத் அரங்கில் நடைபெற்றது.

இதன்போது பாரம்பரிய போட்டிகளான மா இடித்தல், முட்டி உடைத்தல், கீரை வகைகளை இனங்காணல் உள்ளிட்ட பல போட்டிகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

மலரும் மூளாய் அபிவிருத்தி மையத்தின் தலைவர் தி.அம்பிகை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக யாழ். மாநகர சபை ஆணையாளர் ச. கிருஷ்ணேந்திரனும், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை நிர்வாக அதிகாரி வி.உதயசூரியனும், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் வே.சச்சிதானந்தம் மற்றும் கிராம சேவகர் வ.சிவரூபனும் கலந்து சிறப்பித்துடன், கிராம மக்கள், சிறார்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர். (அ-05)

## மருத்துவபீடத்திற்கு அனுமதி பெறாமலே இரு மாதக் கற்கையை தொடர்ந்த யுவதி!

### யாழ்.பல்கலைக்கழகத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெறாது, மருத்துவ பீடத்தில் இரண்டு மாதங்கள் கற்கையை தொடர்ந்த மாணவி தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் மருத்துவ பீட புதுமுக மாணவர்களுக்கான கற்கைநெறிகள் ஆரம்பமாகின. இதன்போது கண்டியை சேர்ந்த பெரும்பான்மையின யுவதி ஒருவர் புது முக மாணவர்களுடன் பல்கலைக்கழக மாணவர் விடுதியில் பதிவுகளை மேற்கொண்டு - விடுதியில் தங்கியிருந்து மருத்துவபீட விரிவுரைகளுக்கு கடந்த 2 மாத காலத்துக்கு மேலாக சென்று வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை கற்கை செயற்பாட்டின்போது மாணவர்களை குழுக்களாக பிரித்துள்ளனர். அதன்போதே 202 மாணவர்கள் காணப்பட வேண்டிய நிலையில் 203 மாணவர்கள் காணப்பட்டமையால் ஏற்பட்ட குழப்பம் ஏற்பட்டது.

அது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டபோதே பல்கலைக்கழக அனுமதி பெறாத யுவதி ஒருவரும் மாணவிகளுடன் இணைந்து கடந்த 2 மாத காலமாக விரிவுரைகளில் கலந்து கொண்டமை தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் மருத்துவ பீடத்தினர் தெரிவிக்கையில்-

மாணவிகள் மத்தியில் உயிரியல் பாடத்தில் 3 சாதாரண (எஸ்) சித்திகளை பெற்ற கண்டியை சேர்ந்த யுவதியும் மருத்துவ பீட மாணவர் விடுதியில் தங்கியிருந்து விரிவுரைகளுக்கு வந்து சென்றுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமையவே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.(அ-05)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு, ஜன. 20

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே.கரிகாலனின் ஒழுங்குபடுத்தலில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம், ஐக்கிய இராச்சியத்தின் நிதி பங்களிப்புடன் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டடோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினர். (அ)

## வவுனியாவில் புவனேஸ்வரி அம்மா முன்பள்ளி நேற்று திறந்து வைப்பு

வவுனியா, ஜன. 20

வவுனியாவில் புவனேஸ்வரி அம்மா முன்பள்ளி கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மகாறம்பைக்குளம், சாந்தசோலை வீதியில் புவனேஸ்வரி அம்மா முன்பள்ளி அவரது புதல்வரும், தொழிலதிபருமான கே.பிரபாகரனால் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த முன்பள்ளியின் பெயர்ப்பலகை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர ஆகியோரால் திரைநீக்கம் செய்யப்பட்டதுடன், முன்பள்ளியும் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன், கோட்டக் கல்வி அதிகாரி செல்வரட்ணம், பாடசாலை அதிபர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (அ)



## யாழில் ஓட்டோ மோதியதில் வயோதிபப் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 20

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக ஓட்டோ மோதி வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த செல்லத்துரை மனோன்மணி (வயது 80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் வீதியில் நடந்து சென்றுகொண்டு இருந்தார். இதன்போது வீதியில் வேகமாக வந்த ஓட்டோ அவர் மீது மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

சிகிச்சைக்காக சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை இடையிலேயே அவர் உயிரிழந்தார். அவரது சடலம் தற்போது சங்கானை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து சம்பவம் குறித்து விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
20.01.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், தை 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# புதிய யாப்பு பற்றி யோசிப்பது சரியானதா?

புதிய அரசியல் யாப்பு வருமானால் அவற்றில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்களில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கின்றார். தமிழ்க் கட்சிகள் என்றால் யார் என்று அடையாளப்படுத்தப்படுபவர்கள் யார் என்பதிலேயே குழப்பங்கள் இருக்கின்ற நிலையில், கட்சிகள் எவ்வாறு ஒன்றுபட முடியுமென்னும் கேள்வியிருக்கின்றது. எனினும் பொதுவாக தமிழ்க் கட்சிகள் தொடர்பில் பேசுபவர்பகள் அரசாங்கங்களில் அங்கம் வகிக்காத கட்சிகளின் ஒற்றுமை பற்றியே பேசுவதுண்டு.

இந்த அடிப்படையில் நோக்கினால் இலங்கை தமிழரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் ஒரணியில் இயங்குவது பற்றிய உரையாடலில் இருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இவற்றுக்கு வெளியில் நிற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை நோக்கித்தான் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. புதிய அரசியல் யாப்பு என்று ஒன்று வருமா என்னும் கேள்வியுண்டு.

இந்த நிலையில்-ஒரு வேளை அவ்வாறானதொரு யாப்பிற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டால் அதில் ஏக்கிய ராச்சிய என்னும் ஒன்றை புகுத்தி, தமிழர் தேசத்தின் இறைமையை அடைமானம் வைக்கப் போவதாகவும் அதற்காகவே தமிழரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் முயற்சிப்பதாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வாதிட்டு வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழரசு - ஜனநாயகக் கூட்டணி கூட்டு ஒரிடத்தில் அமர்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு - அதே வேளை, ஒரு வேளை சந்தித்தாலும் கூட, ஒன்றுபடுவதற்கான வாய்ப்பு இருக்கப் போவதில்லை. ஏனெனில் மாகாண சபை தொடர்பில் எதிர்மறையான நிலைப்பாட்டையே முன்னணியினர் கொண்டிருக்கின்றனர்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தை வைத்து நிலைமைகளை எவ்வாறு குழப்பலாம் என்று சிந்திக்கும் குழுக்கள், புதிய அரசியல் யாப்பின் ஊடாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் சில முன்னேற்றகரமான விடயங்களை முன்வைத்தால் நாட்டில் எவ்வாறான அரசியல் எதிர்வினைகள் நிகழும் என்பதை தற்போதைக்கு கற்பனை செய்ய முடியாது.

ஆனால் நிச்சயம் அதனை அடிப்படையாகக் கொண்டு தென்னிலங்கை கடும் போக்குவாதிகளும் பிக்குகள் அணியும் தெருவில் அணிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறானதொரு நிலையில் தேசிய மக்கள் சக்திக்கு இரண்டு தெரிவுகள் மட்டுமே இருக்கும் - ஒன்றில் அவர்களுக்கு தாங்கள் குறைந்தவர்கள் இல்லை என்பதைக் காண்பிக்கும் நோக்கில், கடும்போக்குவாதத்தை கையில் எடுக்கவேண்டும் அல்லது அரசியல் தற்துணிபுடன் அவர்களை எதிர்த்து நிற்க வேண்டும். மகாநாயக்கர்கள் தலையிட்டால் அதன் பின்னர் ஜே.வி.பி அடங்கிப் போவது தவிர்க்க முடியாதது. மேலும் உண்மையிலேயே அதிகாரப் பகிர்வு ஒன்றை வழங்கவேண்டும் என்பதில் ஜே.வி.பி. ஆர்வமாக இருக்கின்றதா என்னும் கேள்வியுண்டு. அவர்களுடைய கடந்த காலம் அதற்கான பதிலைக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் தமிழ்க் கட்சிகள் அதிகம் அலட்டிக்கொள்ள ஏதும் இல்லை. ஆனால் தமிழ்க் கட்சிகளோ அளவுக்கதிகமாக புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேச முற்படுகின்றன. முன்னணி ஒரு படி மேல் சென்று, தமிழ் நாட்டில், புலம்பெயர் நாடுகளிலும் பேசிவருகின்றது.

# சிறுவர்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு குரல் கொடுக்க முன்வராத சட்டத்தரணிகள்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

கொழும்பு, ஜன. 20

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளுக்காக, இலவச சேவையை வழங்குவதற்கு எந்தவொரு சட்டத்தரணியும் முன்வரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்குகளுக்காக, தன்னார்வமாக செயல்படும் சட்டத்தரணிகள் குழு ஒன்றை அமைப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கடந்த ஒரு வருடமாக சட்டத்தரணிகளுக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

சிறுவர்களின் உரிமைகளுக்காக சட்ட சேவைகளை வழங்குவதே இந்த சட்டத்தரணிகள் குழுவை அமைப்பதற்கான நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த குழுவின் சட்டத்தரணிகளாக செயற்படுவதற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை அனுபவம் இருக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நீதிவான் நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகிய அனுபவமும் அவசியம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறுவர்கள் தொடர்பான சேவைகளில் ஈடுபடும் போது ஏற்படும் அனைத்து தொழில்முறை செலவுகள் மற்றும் போக்குவரத்து செலவுகளை அந்த சட்டத்தரணிகளே ஏற்க வேண்டும் என்பதுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த நிபந்தனைகளின் அடிப்படையில், தன்னார்வ சேவையில் ஈடுபடுவதற்கு எந்தவொரு சட்டத்தரணியும் இதுவரை முன்வரவில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு செல்லும் யாத்திரிகர்களுக்கு இலவச விஸா வேண்டும்

சென்னை, ஜன. 20

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு புனித யாத்திரைகளை மேற்கொள்வோருக்கு தமிழக அரசு இலவச விஸா திட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கைத் தமிழர்களுடனான உறவை மேலும் வலுப்படுத்த முடியும் என அகில உலக சைவசமய பாதுகாப்பு பேரவையின் தலைவர் கா.சசிகுமார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு சபரிமலை யாத்திரை மேற்கொண்டுள்ள ஐயப்ப பக்தர்களை சென்னையில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனை கூறியுள்ளார். (அ)

# அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் 25ஆம் திகதி அடையாள பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜன. 20

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8 மணி முதல் 24 மணிநேரப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுமென அந்த சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

பணிப்புறக்கணிப்பு தொடர்பான எழுத்துப்பூர்வ அறிவிப்புகள் இரண்டு சந்தர்ப்பங்களில் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், சாதகமான பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையிலேயே, தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு சங்கம் முடிவு செய்ததாக அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார். (அ)

# மின்சார வாகனங்கள் இறக்குமதி உயர்வு!

கொழும்பு, ஜன. 20

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் மூலம், 2025 ஆம் ஆண்டில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மொத்த பயணிகள் வாகனங்களில் 10 வீதம் மின்சார வாகனங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


புள்ளிவிவரங்கள் மற்றும் சந்தை தரவுகளின்படி, 2025ஆம் ஆண்டில் 64,556 சிற்றூந்துகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 6,439 வாகனங்கள் முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் ஆகும். மொத்த இறக்குமதியில் 18,709 வாகனங்கள் கலப்பின வாகனங்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆண்டின் தொடக்கத்தில் அதிக விலை கொண்ட சொகுசு மின்சார வாகனங்களுக்கு அதிக தேவை இருந்தபோதிலும், நான்காவது காலாண்டில், மக்களின் கவனம் மலிவு விலையில் உள்ள மின்சார வாகனகள் பக்கம் திரும்பியுள்ளது. 2026 ஆம் ஆண்டில் நடுத்தர அளவிலான சிற்றூந்து வாங்குபவர்களிடையே மின்சார வாகனங்களும் பிரபலமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும், இந்தப் போக்கை மேலும் முன்னேற்றுவதற்கு, நாட்டில் வலுவான சார்ஜிங் உள்கட்டமைப்பை நிறுவுவது அவசியம் என்று வலியுறுத்தப்படுகிறது.(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 20 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - ஜனவரி 06
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**இடபம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழு பறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மிதுனம்** சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கடகம்** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு.

**சிம்மம்** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**கன்னி** தன்னமகுடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**விருட்சிகம்** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**தனுசு** கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.


**மகரம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் கவரும்படி சலுகைகளை அறிவிப்பீர்கள். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**கும்பம்** விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்** நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உங்களின் திறமை வெளிப்படும். லாபம் பெறும் நாள்.

# துன்னாலை காட்டில் பல வருடங்களாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது

## 5,000 லீற்றர் கசிப்பு, 70 ஆயிரம் லீற்றர் கோடா மீட்பு



யாழ்ப்பாணம், ஜன. 20

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை காட்டுப் பகுதியில் பல வருடங்களாக சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரொருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, தப்பியோடிய மற்றைய சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் நெல்லியடி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சுற்றிவளைப்பில் 5,000 லீற்றர் கசிப்பு, 70 ஆயிரம் லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் தடயப் பொருட்களையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05,08)

# தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் நிகழ்வு துரையப்பா விளையாட்டரங்கில்






யாழ்ப்பாணம், ஜன. 20

தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்வுகள், நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் பணிப்பாளர் ஏ.பி. கே. பிரேமதிலக தலைமையில் சனிக்கிழமை மதியம் ஆரம்பமான இப்போட்டிகளின் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஆளுநர் தலைமையில் நடைபெற்றன.

விளையாட்டரங்குக்கு வருகை தந்த ஆளுநரை, தேசிய மாணவர் படையணியின் அதிகாரிகள் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் பார்வையிட்டார்.

மாணவர் படையணியின் விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் தேசிய மாணவர் படையணியின் உயர் அதிகாரிகள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

(எ-03)

# பொற்பதி - மணல்காடு இணைப்பு வீதியை புனரமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு பொற்பதி - மணல்காடு இணைப்பு வீதியை புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மணல்காடு கிராமத்துக்கும் பொற்பதி கிராமத்துக்கும் இடையேயான சுமார் 500 மீற்றர் வீதி பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாமையால் பொற்பதி மற்றும் மணல்காடு கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.


பொற்பதி மற்றும் மணல்காடு கிராம மக்கள் மீன்பிடி தொழிலை பிரதான தொழிலாக கொண்டுள்ளனர்.

500 மீற்றர் வீதி சீரின்மை காரணமாக சுமார் 8 கிலோ மீற்றர் தூரம் சுற்றி சென்று தங்களது அன்றாட செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக பிரதேச மக்கள் கூறினர்.

எனவே, உரியவர்கள் இது குறித்து கவனமெடுத்து வீதியை சீர் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# சேந்தாங்குளம் பகுதியில் 2 கிலோ கஞ்சா மீட்பு!



யாழ்ப்பாணம், ஜன. 20

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேந்தாங்குளம் பகுதியில் இரண்டு கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இளவாலை விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த கஞ்சா பொதி மீட் கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டான் வெள்ளிவிழா பதிவுகள்

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு விற்றவரை கைது செய்யச்சென்ற பொலிஸாரை தாக்கிய வன்முறை கும்பல்

## மட்டக்களப்பில் பரபரப்பு: 6 பேர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 20

மட்டக்களப்பு- ஆயித்தியமலை பிரதேசத்தில் கசிப்பு விற்பனை செய்த நபரை கைது செய்ய முற்பட்ட பொலிஸாரை தாக்கி, கசிப்பு விற்றவரை கைது செய்யவிடாமல் தடுத்து, கைகலப்பில் ஈடுபட்டு, சந்தேக நபரை தப்பியோட வைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் 3 பெண்கள் உட்பட 6 பேரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாக ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள நரிப்பு தோட்டம் பிரதேசத்தில் சட்டவிரோதமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வரும் வீடு ஒன்றை சனிக்கிழமை மாலை 04. 30 மணியளவில் பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது, கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 62 வயது நபரை கசிப்புடன் கைது செய்து கொண்டு செல்வதற்கு பொலிஸார் முயற்சித்தபோது, அவரின் உறவினர்களான பெண்கள் உள்ளிட்ட குழுவினர் பொலிஸாரை தள்ளி வீழ்த்தி தடுத்து, கைகலப்பில் ஈடுபட்டனர். இதன்போது சந்தேக நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். பொலிஸாருக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் 15 பேர் கொண்ட குழுவினர் ஈடுபட்டதையடுத்து பொலிஸார் அவர்களை வீடியோ, படம் எடுத்துவிட்டு அங்கிருந்து விலகிச் சென்றனர்.

இந்த நிலையில், பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்ட ஒருவர் அங்கிருந்து கரடியனாறு பகுதிக்குள் தப்பியோடிய நிலையில் அவரை கரடியனாறு பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்டு கடமையை செய்யவிடாது தடுத்த மற்றும் சட்டவிரோத கசிப்பு விற்பனைக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டுக்களின் கீழ் 3 பெண்கள் உட்பட 5 பேரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 6 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வவுணதீவில் வயல்களை நாசமாக்கிய யானை

மட்டக்களப்பு, ஜன. 20

மட்டக்களப்பு- வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பன்சேனை கிராமத்தில் பெரும்போக நெற்செய்கை வேளாண்மை வயல்களுக்குள் நுழைந்த காட்டு யானை பல மணிநேரங்கள் வயல்வெளிக்குள் நின்று, விளைந்த பெருமளவு நெல்மணிகளை உட்கொண்டது.

இந்த யானையை அப்பிரதேசத்திலிருந்து விரட்டியடிப்பதற்காக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு யானை வெடிகள் கொழுத்திப்போட்டு, பல மணிநேர போராட்டத்தின் பின்னர், அந்த யானையை காட்டுப்பகுதிக்கு விரட்டினர்.

யானையின் அட்டகாசத்தால் பல ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நெல் வயல்கள் நாசமாக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)

# ரயில் தண்டவாளம் அருகில் மோட்டார் குண்டு மீட்பு!



மட்டக்களப்பு- ஜன. 20

மட்டக்களப்பு- சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள வெட்டாறு சோலை பகுதி ரயில் தண்டவாளத்துக்கு அருகில் கைவிடப்பட்டிருந்த 61 மில்லி மீற்றர் ரக மோட்டார் குண்டு ஒன்றை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் கைவிடப்பட்டிருந்த மோட்டார் குண்டை விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினரின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டை வெடிக்க வைப்பதற்கு நீதிமன்ற உத்தரவை பெறுவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அரச மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

மட்டக்களப்பு, ஜன. 20

கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல அரச மருத்துவமனைகளிலும் உள்ள மருத்துவர்கள் நேற்று முதல் மீண்டும் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் நிலவும் நிர்வாகச் சிக்கல்களுக்கு இதுவரை உரிய தீர்வு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மருத்துவர்கள் நேற்று காலை 8 மணிமுதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த மருத்துவமனையின் அத்தியட்சகரின் தன்னிச்சையான செயல்பாடுகள் மற்றும் முறைகேடு குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஒரு வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# 4 வயது மகளிடம் பாலியல் சேட்டை புரிந்த தந்தை!

## கைதாகி 14 நாட்கள் விளக்கமறியலில்

மட்டக்களப்பு, ஜன. 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் மகளிடம் பாலியல் சேட்டை புரிந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தந்தையை 14 நாட்கள் விளக்கமறி யலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதி மன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

வெளி மாவட்டத்தைச் சேர்ந்த தந்தை தொழில் நிமித்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பிர தேசத்தில் வாடகைக்கு வீடு எடுத்து குடும்பத்து டன் தங்கியிருந்து வருகிறார்.

இந்த நிலையில் தந்தை அவரது 4 வயது 8 மாதம் கொண்ட மகளிடம் மீது பாலியல் சேட்டை புரிந்ததாக மகள், தாயாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து தந்தை கைது செய் யப்பட்டதுடன் மகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரை நீதிவான் முன்னிலை யில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை 29ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸ் நிலைய பெண்கள் - சிறுவர் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஆடுகளை சொகுசு காரில் கடத்தி வந்த இருவர் உட்பட மூவருக்கு விளக்கமறியல்

சம்மாந்துறை, ஜன. 20

வீடுகள், வீதிகளில் நிற்கும் ஆடுகளை சூட்சுமமாக சொகுசு காரில் கடத்திய இருவர் உட்பட மூன்று சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புறநகர் பகுதிகளில் உள்ள ஆடுகள் சொகுசு காரில் ஏற்றி செல்லப்பட்டு திருடப்பட்டு வருவதாக பல்வேறு முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்தன.

அத்துடன் கடந்த சனிக்கிழமை மாலை சந்தேகத்துக்கிடமாக சொகுசு கார் ஒன்று நடமாடுவதாக பொதுமக்களிடம் இருந்து சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு மற்றும் பொது மக்களின் தகவலுக்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசாரின் ஆலோசனையின் பிரகாரம் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. என். நிசாந்த பிரதீப் குமாரவின் வழிகாட்டலில் ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும் பல்வேறு குற்றச் செயல்கள் பிரிவின் பதில் பொறுப்பதிகாரியுமான என். றிபாய்டீன் தலைமையிலான குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பாலமுனை பகுதியைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் கடந்த சில நாட்களாக அக்கரைப்பற்று பகுதியில் இருந்து வாடகை அடிப்படையில் சொகுசு கார் ஒன்றை பெற்று ஒலுவில், பாலமுனை, சம்மாந்துறை போன்ற பகுதிகளில் வீடுகள் மற்றும் வீதியோரங்களில் மேய்கின்ற ஆடுகளை சூட்சுமமாக திருடி வந்துள்ளனர்.

இது குறித்து உடனடியாக செயல்பட்ட சம்மாந்துறை பொலிஸார் குறித்த காரினை பின்தொடர்ந்து கைப்பற்றியதுடன் காரில் இருந்து 4 ஆடுகளை மீட்டனர். காரில் பயணம் செய்த இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்தனர். மேலும், கைதான இரு சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பகுதியில் மற்றுமொரு சந்தேக நபரை கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருடப்படும் ஆடுகளை கொள்வனவு செய்யும் நபர் என்று பொலிஸார் கூறினர்.

மேலும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்காவது சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேலும் மீட்கப்பட்ட ஆடுகள், சொகுசு கார் மற்றும் 3 சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பதில் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னிலைப்படுத்திய போது சந்தேக நபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் காணாமல்போன ஆடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (எ-01)

# கொத்மலையில் மிக துரிதகதியில் மறுசீரமைப்பு பணி முன்னெடுப்பு

## 2 மாதங்களுக்கு பின் வீதிகள் புனரமைப்பு

நுவரெலியா, ஜன. 20

டித்வா சூறாவளியால் அதிகம் சேதமடைந்த நுவரெலியா- கொத்மலை, பனங்கம்மன பகுதியிலும் கொத்மலை மஹ பீல்ல எல பகுதியிலும் மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொத்மலை- பனங்கம்மன பகுதியிலுள்ள சுமார் 20 பிரதேசங்களுக்கு செல்லும் வீதி முற்றிலுமாக வெள்ளத்தில் மூழ்கியதால் அந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் சுமார் 2 மாதங்களாக கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் விளைவாக, அநுராதபுரத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் குழு ஒன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் வீதியை புனரமைக்க முன்வந்துள்ளனர்.

கினிகத்தேனை பகுதியைச் சேர்ந்த 2,000 பேர் கொண்ட மற்றொரு குழுவினர் கொத்மலை மஹ பீல்ல எல பகுதியில் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டனர். (எ)

# 'போதைவஸ்த்துக்கள் மீதான அறிவை பகிர்ந்து உயிர்களை பாதுகாப்போம்'

மட்டக்களப்பு, ஜன. 20

போதைவஸ்த்துக்கள் மீதான அறிவை பகிர்ந்து உயிர்களை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு சனி மற்றும் ஞாயிறு இரு தினங்களும் மட்டக்களப்பு மென்றேசா பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு சிவில் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சி. மாமாங்கராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மருத்துவர்கள், போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள், துறைசார் வளவாளர்கள் எனப் பலரும் இதன்போது கலந்து கொண்டு மாணவர்களுக்குரிய விளக்கங்களையும் தெளிவூட்டல்களையும் வழங்கினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினர் வடக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வமாக மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும்.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்து **16** ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், வடக்கு மாகாணம் மீளக்கட்டியெழுப்பப்படுவதில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. பிரதான வீதிகள் புனரமைக்கப்பட்டிருந்தாலும், கிராமப்புற வீதிகள் மற்றும் தீவகப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதிகள் மிகவும் பின்தங்கியுள்ளன. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான நீண்ட பயண நேரம் சுற்றுலாவிகளுக்குச் சவாலாக உள்ளது.

எனினும், இந்தியாவுடனான நேரடி வான் மற்றும் கடல்வழித் தொடர்புகள் சுற்றுலாவிகளின் வருகையை அதிகரிக்கச் செய்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் அதிகரிக்கவுள்ள சுற்றுலாவிகளைக் கருத்தில் கொண்டும், எதிர்வரும் **21**ஆம் திகதி நடைபெறவுள்ள முதலீட்டாளர் மாநாட்டைக் கருத்தில் கொண்டும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

எமது மாகாணத்தின் மூலப்பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு, மீண்டும் முடிவுப் பொருட்களாக இங்கேயே விற்பனைக்கு வரும் நிலை மாற்றப்பட வேண்டும். இங்கேயே அவற்றைப் பெறுமதிசேர் பொருட்களாக மாற்றுவதற்குரிய பொறிமுறைகள் அவசியம்.

உலக வங்கியின் "புத்துயிர்" திட்டத்தின் முதல் கட்டத்தில் யாழ். மாவட்டம் மட்டுமே உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனால், வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களும் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளன. எனவே, ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி எமது பொருளாதார மேம்பாட்டை உறுதிப்படுத்த நாம் விரும்புகின்றோம், என ஆளுநர் வலியுறுத்தினார்.

இதன்போது மாவட்டச் செயலாளர்களால் பின்வரும் முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன:

முல்லைத்தீவு: கொக்கிளாய் பாலம் அமைத்தல்.

கிளிநொச்சி: நீர் விநியோகத் திட்டம் மற்றும் பூநகரி கௌதாரிமுனைச் சுற்றுலா வீதிப் புனரமைப்பு.

மன்னார்: வீதிப் புனரமைப்பு மற்றும் மன்னார் தீவின் வடிகாலமைப்பு மேம்பாடு.

வவுனியா: வடக்கின் நுழைவாயிலான வவுனியாவின் வன்னேரிக்குளம் சுற்றுலாத் திட்டத்தை உள்வாங்குதல்.

யாழ்ப்பாணம்: தெரிவு செய்யப்பட்ட திட்டங்களை விரைவுபடுத்தல்.

இதற்குப் பதிலளித்த நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள், "வடக்கு மாகாணத்திலிருந்து நியாயப்பாடுகளுடன் கூடிய சிறந்த திட்டங்கள் முன்வைக்கப்படும் பட்சத்தில், முன்னுரிமை அடிப்படையில் உலக வங்கித் திட்டங்களை மாற்றியமைக்க முடியும். எனினும், இவை கடன் நிதிகள் என்பதால், முதலீட்டுக்குரிய நற்பேறுகள் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். தேவைப்பாடுகளை சரியாக அடையாளம் கண்டு மிகச் சிறந்த திட்டங்களை முன்வைக்கும்போது அரசாங்கத்தால் கூட நிதி வழங்க முடியும், எனக் குறிப்பிட்டனர்.

மேலும், கிராமிய மற்றும் நகர்ப்புறங்களை இணைக்கும் "ரூபன்" திட்டம் மற்றும் விவசாயத் துறைசார் திட்டமிடல்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. கடந்த கால வெளிநாட்டு நிதித் திட்டங்களின் அனுபவங்களைக் கொண்டு, இனிவரும் திட்டங்கள் மாகாணத் தேவைகளைச் சரியாக அடையாளப்படுத்தி முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகங்களான இந்திக பிரேமரத்ன (தேசிய திட்டமிடல்), ஜூட் நிலுக்ஷ (தேசிய வரவு-செலவு), சமந்த பண்டார (வெளிநாட்டு வளங்கள்) மற்றும் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ)

## யாழில்...

யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார். அவர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாக வைத்தியர் கள் தெரிவித்தனர். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-5)

## மருத்துவ...

முன்மொழியப்பட்டுள்ள **2026** பாதீட்டுத் திட்டத்தில், வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத் துறையினர் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்கப்படவில்லை.

இதற்கு முன்னர் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், வாக்குறுதி அளிக்கப்பட்டபடி மேலதிக பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லை என்பதுடன், எட்டப்பட்ட உடன்பாடுகளும் நிறைவேற்றப்படவில்லை.

சுகாதாரத் துறையில் நிலவும் அதிருப்தி காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் விஜேசிங்க சுட்டிக்காட்டினார். மருத்துவத் துறையினர் முன்வைத்துள்ள கோரிக் கைகளுக்கு முறையான மற்றும் அர்த்தமுள்ள தீர்வுகள் கிடைக்கும் வரை இந்த வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. (அ)

## திருமலை...

இதன்படி, பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் உள்ளிட்ட 10 பேரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் அனைவரும் நேற்று திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நான்கு பௌத்த பிக்குகளும், ஆறு பொது மக்களுமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை டச்பே கடற்கரை மற்றும் போதிராஜ விகாரை சூழலில் நிலவிய பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியில், புத்தர் சிலை ஒன்றை வலுக்கட்டாயமாக நிறுவ முயன்றதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தொல்லியல் சட்டங்கள் மற்றும் கரையோரப் பாதுகாப்பு விதிகளுக்கு முரணாக வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நீதிமன்ற வளாகத்தில் நேற்று அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## போர்க்கால...

அரசாங்கம் கடந்த கால வன்முறைகள் மற்றும் குற்றங்களை எதிர்கொள்ள தயக்கம் காட்டுவதால், நாடு என்ற ரீதியில் இலங்கை தோல்வியடைந்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சர்வதேச அளவில் சுயாதீன விசாரணை அமைப்பு, குற்றவாளிகளுக்கு தண்டனை, மாற்றத்துக்கான இழப்பீடுகள் என்பன யாதார்த்தமாக பெற்றுக் கொடுக்கப்படாவிடின், உண்மையான மீண்டெழுதலுக்கு சாத்தியமில்லை என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## அரசமைப்பு...

அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்களான அனுலா விஜேசுந்தர, பிரதாப் ராமானுஜன் மற்றும் தினேஷா சமரட்ன ஆகியோரின் பதவிக்காலம் வெள்ளிக்கிழமை முடிவடைந்த நிலையில், புதிய நியமனங்கள் குறித்து பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே கலந்துரையாடல்கள் நடந்து வந்தன.

அரசியலமைப்பின்படி, சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்களையும் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் உடன்பாட்டின் மூலம் மட்டுமே நியமிக்க முடியும்.

பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற அண்மைய சந்திப்பின்போது, பிரதமர் ஹரிணி அமரசூரியவும், சஜித் பிரேமதாஸாவும் தலா ஒவ்வொரு பட்டியலை சமர்ப்பித்தனர். பிரதமர் ஹரிணி அமரசூரிய ஏழு பெயர்களை சமர்ப்பித்ததாகவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 10 பெயர்களை சமர்ப்பித்ததாகவும் தெரியவந்துள்ளது.

முன்னாள் துணைவேந்தர், முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும் பல நிபுணர்கள் சஜித் பிரேமதாச முன்வைத்த பட்டியலில் அடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச தரப்பு பரிந்துரைத்த ஒருவரை ஏற்றுக் கொள்ள சஜித் பிரேமதாஸ சம்மதித்தால், அவரால் பரிந்துரைக்கப்படும் இரண்டு வேட்பாளர்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக அரசாங்கத் தரப்பு தெரிவித்திருந்தது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, முன்னாள் மாவட்ட செயலாளரின் பெயரை பரிந்துரைத்தார் என்றும், அவரை ஏற்றுக் கொள்ள எதிர்க்கட்சித் தலைவர் உடன்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது சமீபத்திய நடத்தையைக் கருத்தில் கொண்டு, அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினராக பாரபட்சமின்றி நடந்து கொள்வார் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அரசியலமைப்பு பேரவைக்கு புதிய உறுப்பினர்களை தெரிவு செய்வதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இதனிடையே, அரசியலமைப்பின் பிரிவு 41 எவ் இன் படி, அரசியலமைப்பு பேரைவைக்கு சிவில் சமூக உறுப்பி னர்களை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டால், புதிய உறுப்பினர்கள் பதவியேற்கும்வரை தற்போதைய சிவில் சமூக உறுப்பினர்கள், தங்கள் பதவிகளில் தொடரலாம் எனக் கூறப்பட்டுள்ளது. (அ)

## தமிழரசு...

நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார். அந்த கூட்டங்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளுக்கோ மக்கள் பிரதிநிதிகளுக்கோ உரிய முறையில் அழைப்புக்களும் விடப்படவில்லை. அதேநேரம் [illegible] வழங்கப்பட வில்லை. வெறுமனே அரச நிதியில் என்.பி.பி. அல்லது ஜே.வி.பி. கட்சியினர் மட்டுமே அந்த நிகழ்வுகளில் பங்கெடுத்து இருக்கின்றனர்.

எனவே அரச நிதியில் தேசிய மக்கள் சக்தியினர் 'ஷோ' காட்டுவதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. என்.பி.பியினர் வடக்கிற்கு வந்து படம் காட்டுவதை நிறுத்தவேண்டும்.

இந்த விடயங்களை ஜனாதிபதி கவனத்தில் எடுத்து எதிர்காலத்தில் செயற்படவேண்டும். இந்த அரசாங்கம் தாம் அரசியல் செய்வதற்காக எமது கட்சியை விமர்சனம் செய்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. எமது கட்சி விடயங்களை நாங்கள் பார்த்துக் கொள்வோம்-என்றார். (அ)

## வவுனியா...

மரணமடைந்தவர் வவுனியா, கோவில் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய சிவலிங்கம் டனுசியன் என்ற உயர்தர வகுப்பு மாணவராவார்.

சம்பவம் தொடர்பில் மாமடுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

## முன்பள்ளி...

நோக்கு மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எனும் இறுதி அமர்வில் உரையாற்றியபோது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

சிறுவர் பராமரிப்பு என்பது ஒரு தனிப்பட்ட சுமை அல்ல. அது ஒரு அரசு மற்றும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், முன்பிள்ளைப்பருவத்தை இலக்காகக் கொண்டு சிறுவர் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக "ஸ்டெப்-அப்" தொடர்பாடல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**2025** முதல் **2029**ஆம் ஆண்டு வரை முன்பிள்ளைப் பருவ சிறுவர் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்கான தேசிய பல்துறை மூலோபாய செயற்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒட்டிசம் உள்ளிட்ட நரம்பு மண்டல குறைபாடுகள் உள்ள சிறுவர்களுக்காக மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஐந்து ஆண்டுகால திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இலங்கையில் உள்ள "பராமரிப்பாளர்" என்பவரை வெறும் ஒரு "உதவியாளராக" மாத்திரம் பார்க்காது சான்றிதழ் பெற்ற ஒரு தொழில் வல்லுநராக மாற்றுவதே தங்களது நோக்கம் எனவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜினி சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார். (அ)

## புதிய...

மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும் ஆபத்தான பிரிவுகள் இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

இந்த யோசனையில், பயங்கரவாதம் என்பதற்கான விளக்கம் மிகவும் விரிவாகவும், தெளிவாக இல்லாமலும் உள்ளது. இது அரசியல் செயல்பாடுகள் மற்றும் அமைதியான போராட்டங்களை முடக்குவதற்குப் பயன்படுத்தப்படலாம்.

அத்துடன் அரசாங்கத்தை "வற்புறுத்துதல்" அல்லது "மக்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல்" போன்ற பொதுவான செயல்களும் பயங்கரவாதமாகக் கருதப்பட வாய்ப்புள்ளது.

ஒரு சந்தேக நபரை ஒரு வருடம் வரை நீதிமன்ற விசாரணையின்றித் தடுப்புக்காவலில் வைக்க இந்தப் புதிய சட்டம் அனுமதி அளிக்கிறது.

பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவின் பேரில், இந்தத் தடுப்புக்காவலை இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கவும் முடியும்.

இராணுத்தினர் பிடியாணை இன்றி யாரையும் நிறுத்தவும், சோதனையிடவும், கைது செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்திற்குப் பயங்கரவாதத் தடுப்புப் பணிகளில் இத்தகைய அதிகாரங்களை வழங்குவது துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது.

தவறான அல்லது பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையிலான தகவல்களைப் பரப்புகிறார்கள் என்ற பெயரில் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த யோசனை வழி வகுக்கிறது.

குறிப்பிட்ட இடங்களைப் "தடை செய்யப்பட்ட இடங்கள்" என அறிவிக்க முடியும். அத்துடன் அங்கு புகைப்படம் எடுத்தால் 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்

இந்த நிலையில், இலங்கை அரசு சர்வதேச அமைப்புகளுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைகளுக்காக அளித்த மனித உரிமை வாக்குறுதிகளை இந்தச் சட்டம் மீறுவதாகவும் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது

இதேவேளை, தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நிறுத்தி வைக்கவும், புதிய சட்டத்தை உருவாக்கும்போது பொதுமக்கள் மற்றும் நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்கி, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அதனை மாற்றியமைக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி ஆய்வு அறிக்கையை வெளியிடுக!

கொழும்பு, ஜன. 20

மின் நிலைய உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தொடர்பான சர்ச்சையில், வெளிநாட்டு ஆய்வு கூட அறிக்கையை உடனடியாக வெளியிடுமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் அதிகரித்துள்ளது.

முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட, நெதர்லாந்தின் "கொட்டெக்னா" ஆய்வுகூடம் தயாரித்த அறிக்கை ஜனவரி 16ஆம் திகதிக்குள் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டபோதும், அரசியல் தலையீட்டால் இதுவரை வெளியிடப்படவில்லை என குற்றஞ்சாட்டினார்.

உள்ளூர் ஆய்வுகூடம் நிலக்கரி தரமற்றது என்றும், சுற்றுச்சூழலுக்கும் மின் நிலைய இயந்திரங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறிய நிலையில், அதே முடிவை வெளிநாட்டு ஆய்வுகூடமும் உறுதிப்படுத்தியுள்ளதாக தகவல் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே, 300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வழக்கமாக மணிக்கு 107 மெற்றிக் தொன் நிலக்கரி போதுமான நிலையில், புதியதாக இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த நிலக்கரியை பயன்படுத்த 120 மெற்றிக் தொன் தேவைப்படுவதாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிலக்கரியின் வெப்ப மதிப்பு தேவையான அளவுக்கு குறைவாக இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

நிலக்கரி கொள்முதல் நடைமுறைகள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு சாதகமாக மாற்றப்பட்டுள்ளதாகவும், இதனால் எதிர்காலத்தில் நிலக்கரி பற்றாக்குறை, மின்சார செலவு உயர்வு மற்றும் மின்வெட்டு அபாயம் ஏற்படக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (அ)

## புதிய அரசமைப்புப் பணிகள் முதற்கட்ட கலந்தாய்வு நாளை

கொழும்பு, ஜன. 20

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறை தொடர்பாக சட்ட அறிஞர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட முதற்கட்டக் கலந்துரையாடல் நாளை புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க மற்றும் ஹர்ஷன நாணயக்கார ஆகியோர் இதற்காக அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் எதிர்க்கட்சியின் பல அரசியல் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அரசியலமைப்பு உருவாக்க செயல்முறை தொடர்பான சிறப்பு உள்ளக கலந்துரையாடலாக இது நடைபெறுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பிரதமர் ஹரிணி அமரசூரிய சுவிற்சர்லாந்துக்கு பயணம்!

**உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்கிறார்**

கொழும்பு, ஜன. 20

சுவிற்சர்லாந்தின் டாவோஸ்-குளோஸ்டர்ஸ் நகரில் நடைபெறவுள்ள 56ஆவது உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நாட்டில் நேற்று புரப்பட்டார்.

சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நேற்று முதல் 23 ஆம் திகதி வரை உலகப் பொருளாதார மன்றத்தின் 56ஆவது வருடாந்த மாநாடு இடம்பெறுகின்றது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நேற்று அதிகாலை இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இந்த மாநாட்டில் அரச தலைவர்கள், முன்னனி பன்னாட்டு நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் புத்தாக்கச் சிந்தனையாளர்கள் உட்பட 3,000 இற்கும் மேற்பட்ட உலகளாவிய தலைவர்கள் ஒன்றிணையவுள்ளனர்.



இவ்விஜயத்தின்போது, பிரதமர் சர்வதேச மட்டத்திலான முக்கிய தலைவர்கள், உலகளாவிய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய முக்கியஸ்தர்களுடன் உயர் மட்ட இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

ரணில் மீதான வழக்கு;

## சொலிசிட்டர் ஜெனரலின் கீழ் விசாரணைகள் கண்காணிப்பு

கொழும்பு, ஜன. 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் பயணம் தொடர்பான வழக்கு விசாரணை, சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க, லண்டன் சென்றபோது அரச நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தியதாகக் குற்றஞ்சுமத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையே இவ்வாறு விராஜ் தயாரத்னவின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக, லண்டனில் உள்ள வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தில் தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தபோது, 16.6 மில்லியன் ரூபா அரச நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கை, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரில் நெறிப்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக லண்டனுக்குச் சென்ற குற்றப் புலனாய்வுத்துறையின் விசாரணை அதிகாரிகளால் பெறப்பட்ட ஆவணங்கள் இதுவரை சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லையெனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாட்டுக்குள் இனவாதத்தை மீண்டும் தூண்டவேண்டாம்!

**ஜனாதிபதியிடம் கோருகிறது ஐக்கிய மக்கள் சக்தி**



கொழும்பு, ஜன. 19

நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கு ஒருபோதும் இடமளிப்பதில்லை என தெரிவிக்கும் ஜனாதிபதியும் அரசாங்கமுமே இனவாத கருத்துக்களை பரப்பி வருகின்றன. அதனால் நாட்டுக்குள் மீண்டும் இனவாதத்தைத் தூண்ட வேண் டாம் என ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

ஜனாதிபதி வடக்குக்கு சென்று தெரிவித்திருந்த கருத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்து தொடர்பில் மக்கள் மத்தியில் சர்ச்சை நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் மீண்டும் இனவாத்தை தூண்டாமல் நாங்கள் இலங்கையர்களாக ஒன்றாக எழுந்திருக்கவேண்டும்.

தெற்கில் ஒருவிதமாகவும் வடக்குக்கு சென்று அதனை வேறு விதமாகவும் சொல்லி, நாட்டு மக்களை ஏமாற்றுவதை தற்போதாவது நிறுத்தவேண்டும் என ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம்.

வடக்குக்கு சென்று பாரியளவில் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, அதனை தெற்கில் விமர்சிக்கின்றனர். அதே நேரம் தமிழ், சிங்களம் முஸ்லிம் என பார்க்காமல் நாங்கள் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

இனவாதத்தை தூண்டுவதில்லை என அரசாங்கம் தெரிவித்துவருகின்றபோதும் ஜனாதிபதியும் அரசாங்கமுமே இனவாதத்தை தூண்டி வருகிறது. அதனால் மீண்டும் இனவாதத்தை தூண்டவேண்டாம் என தயவாக கேட்டுக்கொள்கிறோம்-என்றார். (அ)

# "பிரஜா சக்தி" திட்டம் உள்ளூராட்சிகளின் அதிகாரத்தை பறிக்கும் செயற்பாடல்ல!

கொழும்பு, ஜன. 20

கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரவலுவூட்டல் அமைச்சின் "பிரஜா சக்தி" திட்டம், உள்ளாட்சி மன்றங்களின் அதிகாரங்களை பறிக்கும் நடவடிக்கை அல்ல என அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் கிராம அபிவிருத்தி செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மையையும், பொதுமக்கள் பங்கேற்பையும் அதிகரிப்பதற்காகவே உருவாக்கப்பட்டதாக அமைச்சு விளக்கமளித்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இந்தத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்களைத் தடுக்கிறது என குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து அமைச்சு இவ்விளக்கத்தை வழங்கியுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க -

"பிரஜா சக்தி" திட்டம் அபிவிருத்திப் பணிகளில் பொதுமக்களின் பொறுப்புணர்வையும் ஈடுபாட்டையும் அதிகரித்து, செயல்திறனை மேம்படுத்துவதே நோக்கம் என்றும், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களில் எந்தவிதத் தலையீடும் இல்லை என்றும் கூறினார்.

இந்நிலையில், இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் நடைபெறும் அபிவிருத்திப் பணிகள் இந்தத் திட்டம் வழியாக மாற்றப்படுகின்றன என எதிர்ப்பு தெரிவித்துள்ளது. (அ)

## தண்ணீர் தொட்டியில் கைத்துப்பாக்கி!

கொழும்பு, ஜன. 20

கொழும்பு, வாழைத்தோட்டம் பகுதியிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த தண்ணீர் தொட்டியிலிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த தண்ணீர் தொட்டியிலிருந்து 29 தோட்டாக்களைக் கொண்ட வெடிபொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த துப்பாக்கி தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இலங்கையில் கணினி எழுத்தறிவு விகிதம் 38 வீதமாக அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 20

2025ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், இலங்கையில் கணினி எழுத்தறிவு விகிதம் 38.4 வீதமாக அதிகரித்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நகர்ப்புறங்களில் 52.1 வீதமும், கிராமங்களில் 36.6 வீதமும், பெருந்தோட்டப் புறங்களில் 18.6 வீதமும், கணினி எழுத்தறிவு வீதம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், 2025ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் கணினி எழுத்தறிவானது ஆண்களிடையே 39.9 வீதமாகவும், பெண்களிடையே 37.1 வீதமாகவும் பதிவாகியுள்ளது.

15 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் அனைவரும் 75.6 சதவீத கணினி எழுத்தறிவுடன் காணப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவர்களிடையே கணினி எழுத்தறிவு அதிகமாகக் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில், 5 முதல் 69 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தாமாகவே கணினியைப் பயன்படுத்தக் கூடியவர்களாக அறியப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.